CC.No.229/2026 (JM.No.II, DHARMAPURI)

10.06.2026

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர் இல்லை)**

**PW–1 : திரு.முத்துசாமி, தலைமை காவலர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது தொப்பூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.08.2024 வருடம் 09.30 மணிக்கு தருமபுரி மதுவிலக்கு அமல் பிரிவில் பணியில் இருந்தபோது காவல் உதவி ஆய்வாளர் கோபி அவர்களுக்கு கிடைத்த இரகசிய தகவலின்பேரில் நான் மற்றும் தலைமை காவலர் விஜயகுமார் ஆகியோர்கள் மது விலக்கு வழக்குகள் சம்பந்தமாக ரோந்து பணியில் இருந்த போது எங்களுக்கு கிடைத்த தகவலின் பேரில் அதியமான்கோட்டை, வன்னியர்தெரு கிராமத்தில் எதிரி ரமேஷ் அவரது வீட்டின் பின்புறம் ஒரு பையில் ஏதோ வைத்து கொண்டிருந்தார். எங்களை பார்த்து தப்பித்து ஓட முயற்சித்தார். அவரை பிடித்து விசாரித்தபோது 180ml அளவு கொண்ட copper brandy –26 அரசு மது பாட்டிகளை அரசின் அனுமதி இல்லாமல் சட்ட விரோதமாக சில்லரை விற்பனை செய்ய வைத்திருந்த பாட்டில்களை நான் மற்றும் தலைமை காவலர் விஜயகுமார் இருவரும் பாட்டில்களை காவல் உதவி ஆய்வாளர் கோபி அவர்களிடம் ஒப்படைத்தோம். பின்பு எதிரியை கைது செய்து நான் மற்றும் தலைமை காவலர் விஜயகுமார் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜருடன் கூடிய அழித்தல் மகஜர் தயார் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜரில் அதில் சாட்சியாக இருந்து நானும், தலைமை காவலர் விஜயகுமார் என்பவரும் கையெழுத்திட்டோம். இது சம்பந்தமாக காவல் உதவி ஆய்வாளர் கோபி என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். கைப்பற்றுதல் மகஜருடன் கூடிய அழித்தல் மகஜர் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

சம்பவ இடத்திற்கு நானும், தலைமை காவலர் விஜயகுமார் ஆகியோர்கள் காலை 09.30 மணிக்கு சென்றோம். எதிரியின் வீடு ஓட்டு வீடா, மெத்த வீடா என்றால் அட்டை போட்ட வீடு. எதிரியின் வீடு எந்த திசையை நோக்கி இருந்தது என்று தெரியாது. மேற்படி நேரத்தில் மதுபான கடையில் மதுபானம் கிடைக்கும் என்றால் சரிதான். மதுபான பாட்டில்கள் பிளாஸ்டிக் பையில் கட்டி வைத்திருந்தார். மதுபானங்களை கைப்பற்றிய போது அனைத்து பாட்டில்கள் திறந்த நிலையில் இருந்தது. அதில் மதுபானம் இருந்தது. நான் சொல்வது பொய் என்றாலும், மூடி திறந்த நிலையில் இருந்தால் மதுபானம் கீழே கொட்டி இருக்கும் என்றாலும், பாட்டில்கள் காலியாக இருக்கும் என்றாலும் நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. காவல் துறையினர் சார்ந்தவர்களை தவிர தனி நபர்கள் சாட்சிகள் இல்லை என்றால் சரிதான். மதுபானங்களை அதே இடத்தில் கொட்டி அழித்து அழித்தல் மகஜர் தயார் செய்தோம். மதுபான பாட்டில்களை திறந்து அங்கேயே கொட்டி, பாட்டில்களை உடைத்து அழித்தோம். கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் மதுபாட்டில்களின் புகைப்படம் எதையும் நாங்கள் எடுக்கவில்லை என்றால் சரிதான். காவல் துறை ஆய்வாளர் அவர்களின் உத்தரவின்பேரில் அழித்தோம். காவல் நிலையத்தில் வைத்து மகஜர் தயார் செய்தோம். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், ஆவணங்கள் அனைத்து காவல்

நிலையத்தில் வைத்து தயாரித்தோம் என்றாலும், அதனால் தான் புகைபடங்கள் எடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்போம் என்றாலும், புள்ளி விவரத்திற்காக பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.06.10 16:52:38 +0530